(பத்தாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

**இல. 47.]**

# பாராளுமன்றக் கூட்ட அறிக்கை

2025 ஏப்ரல் 08, செவ்வாய்க்கிழமை மு.ப. 9.30 மணிக்கு

## சமூகமளித்தோர்:

கௌரவ **(டாக்டர்) ரிஸ்வி சாலி**, பிரதிச் சபாநாயகரும் குழுக்களின் தவிசாளரும்

கௌரவ **(திருமதி) ஹேமாலி வீரசேகர**, குழுக்களின் பிரதித் தவிசாளர்

---

கௌரவ **கலாநிதி ஹரினி அமரசூரிய,** பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சர்

கௌரவ **(பேராசிரியர்) ஏ.எச்.எம்.எச். அபயரத்ன,** பொதுநிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்

கௌரவ **(டாக்டர்) கிரிஷாந்த அபேசேன,** விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப அமைச்சர்

கௌரவ **அனுர கருணாதிலக்க,** நகர அபிவிருத்தி, நிர்மாணிப்பு மற்றும் வீடமைப்பு அமைச்சர்

கௌரவ **கே.டீ. லால் காந்த,** கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சர்

கௌரவ **சுனில் குமார கமகே,** இளைஞர் விவகாரங்கள் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர்

கௌரவ **ராமலிங்கம் சந்திரசேகர்,** கடற்றொழில், நீரியல் மற்றும் கடல் வளங்கள் அமைச்சர்

கௌரவ **குமார ஜயகொடி,** வலுசக்தி அமைச்சர்

கௌரவ **(டாக்டர்) நலிந்த ஜயதிஸ்ஸ,** சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடக அமைச்சர் மற்றும் அரசாங்கக் கட்சி முதற்கோலாசான்

கௌரவ **(கலாநிதி) அனில் ஜயந்த,** தொழில் அமைச்சர் மற்றும் பொருளாதார அபிவிருத்தி பிரதி அமைச்சர்

கௌரவ **சட்டத்தரணி ஹர்ஷன நானாயக்கார,** நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சர்

கௌரவ **(கலாநிதி) உபாலி பன்னிலகே,** கிராமிய அபிவிருத்தி, சமூகப் பாதுகாப்பு மற்றும் சமூக வலுவூட்டுகை அமைச்சர்

கௌரவ **(திருமதி) சரோஜா சாவித்திரி போல்ராஜ்,** மகளிர் மற்றும் சிறுவர் அலுவல்கள் அமைச்சர்

கௌரவ **பிமல் ரத்நாயக்க,** போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சர் மற்றும் பாராளுமன்றச் சபை முதல்வர்

கௌரவ **ஆனந்த விஜேபால,** பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற அலுவல்கள் அமைச்சர்

கௌரவ **கே.வி. சமந்த வித்யாரத்ன,** பெருந்தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சர்

கௌரவ **வசந்த சமரசிங்க,** வர்த்தக, வாணிப, உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சர்

**கௌரவ (கலாநிதி) ஹினிதும சுனில் செனெவி,** புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர்

**கௌரவ சுனில் ஹந்துன்னெத்தி,** கைத்தொழில் மற்றும் தொழில் முயற்சியாண்மை அபிவிருத்தி அமைச்சர்

**கௌரவ விஜித ஹேரத்,** வெளிநாட்டலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலா அமைச்சர்

**கௌரவ சஜித் பிரேமதாச,** பாராளுமன்ற எதிர்க்கட்சித் தலைவர்

**கௌரவ சதுரங்க அபேசிங்ஹ,** கைத்தொழில் மற்றும் தொழில் முயற்சியாண்மை அபிவிருத்தி பிரதி அமைச்சர்

**கௌரவ நாமல் கருணாரத்ன,** கமத்தொழில் மற்றும் கால்நடை வளங்கள் பிரதி அமைச்சர்

**கௌரவ ஜனித ருவன் கொடித்துவக்கு,** துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான சேவைகள் பிரதி அமைச்சர்

**கௌரவ ரத்ன கமகே,** கடற்றொழில், நீரியல் மற்றும் கடல் வளங்கள் பிரதி அமைச்சர்

**கௌரவ எரங்க குணசேகர,** இளைஞர் விவகாரங்கள் பிரதி அமைச்சர்

**கௌரவ (டாக்டர்) பிரசன்ன குணசேன,** போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் பிரதி அமைச்சர்

**கௌரவ எண்டன் ஜயகொடி,** சுற்றாடல் பிரதி அமைச்சர்

**கௌரவ ஆர்.எம். ஜயவர்தன,** வர்த்தக, வாணிப, உணவுப் பாதுகாப்பு பிரதி அமைச்சர்

**கௌரவ மஹிந்த ஜயசிங்ஹ,** தொழில் பிரதி அமைச்சர்

**கௌரவ மேஜர் ஜெனரல் (ஓய்வுபெற்ற) அருண ஜயசேகர,** பாதுகாப்பு பிரதி அமைச்சர்

**கௌரவ சுகத் திலகரத்ன,** விளையாட்டுத்துறை பிரதி அமைச்சர்

**கௌரவ கமகெதர திசாநாயக்க,** புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் பிரதி அமைச்சர்

**கௌரவ வசந்த பியதிஸ்ஸ,** கிராமிய அபிவிருத்தி, சமூகப் பாதுகாப்பு மற்றும் சமூக வலுவூட்டுகை பிரதி அமைச்சர்

**கௌரவ சுந்தரலிங்கம் பிரதீப்,** பெருந்தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதிகள் பிரதி அமைச்சர்

**கௌரவ முனீர் முலாபர்,** தேசிய ஒருமைப்பாட்டு பிரதி அமைச்சர்

**கௌரவ (பேராசிரியர்) ருவன் ரணசிங்க,** சுற்றுலா பிரதி அமைச்சர்

**கௌரவ (டாக்டர்) சுசில் ரணசிங்ஹ,** காணி மற்றும் நீர்ப்பாசன பிரதி அமைச்சர்

**கௌரவ சட்டத்தரணி சுனில் வடகல,** பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற அலுவல்கள் பிரதி அமைச்சர்

**கௌரவ எரங்க வீரரத்ன,** டிஜிட்டல் பொருளாதார பிரதி அமைச்சர்

**கௌரவ ரீ. பீ. சரத்,** வீடமைப்பு பிரதி அமைச்சர்

**கௌரவ (டாக்டர்) நாமல் சுதர்சன,** மகளிர் மற்றும் சிறுவர் அலுவல்கள் பிரதி அமைச்சர்

**கௌரவ (கலாநிதி) ஹர்ஷண சூரியப்பெரும,** நிதி, திட்டமிடல் பிரதி அமைச்சர்

**கௌரவ பி. ருவன் செனரத்,** மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி பிரதி அமைச்சர்

**கௌரவ (டாக்டர்) மதுர செனெவிரத்ன,** கல்வி, உயர் கல்வி பிரதி அமைச்சர்

**கௌரவ அருண் ஹேமச்சந்திரா,** வெளிநாட்டலுவல்கள் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு பிரதி அமைச்சர்

**கௌரவ நலின் ஹேவகே,** தொழிற் கல்வி பிரதி அமைச்சர்

---

**கௌரவ ரொஷான் அக்மீமன**

**கௌரவ அஜித் அகலகட**

**கௌரவ அமிர்தநாதன் அடைக்கலநாதன்**

**கௌரவ அபூபக்கர் ஆதம்பாவா**

**கௌரவ (திருமதி) சட்டத்தரணி சாகரிகா அதாவுத**

**கௌரவ ஹெக்டர் அப்புஹாமி**

**கௌரவ ரோஹித அபேகுணவர்தன**

**கௌரவ சட்டத்தரணி யூ.பி. அபேவிக்ரம**

**கௌரவ (பேராசிரியர்) எல்.எம். அபேவிக்ரம**

**கௌரவ (டாக்டர்) நிஹால் அபேசிங்ஹ**

**கௌரவ (டாக்டர்) இராமநாதன் அர்ச்சுனா**

**கௌரவ எம்.கே. எம். அஸ்லம்**

**கௌரவ ஹேஷா விதானகே அங்கும்புர ஆரச்சி**

**கௌரவ லக்ஸ்மன் நிபுண ஆரச்சி**

**கௌரவ மஞ்ஜுள சுரவீர ஆரச்சி**

**கௌரவ (கலாநிதி) (செல்வி) கௌஷல்யா ஆரியரத்ன**

**கௌரவ பீ. ஆரியவங்ஷ**

**கௌரவ (டாக்டர்) நஜீத் இந்திக்க**

**கௌரவ அர்கம் இல்யாஸ்**

**கௌரவ எம்.எஸ். உதுமாலெப்பை**

**கௌரவ (திருமதி) ஒஷானி உமங்கா**

**கௌரவ கயந்த கருணாதிலக்க**

**கௌரவ ரவி கருணாநாயக்க**

**கௌரவ (செல்வி) கிருஷ்ணன் கலைச்செல்வி**

**கௌரவ சனாதிபதி சட்டத்தரணி எம். நிசாம் காரியப்பர்**

**கௌரவ (திருமதி) சட்டத்தரணி சமிந்திரானி கிரிஎல்லே**

**கௌரவ கதிரவேலு சண்முகம் குகதாசன்**

**கௌரவ வசந்த புஷ்ப குமார**

**கௌரவ சமிந்த லலித் குமார**

**கௌரவ சட்டத்தரணி சரத் குமார**

**கௌரவ (திருமதி) சட்டத்தரணி நிலந்தி கொட்டஹச்சி**

**கௌரவ கவீந்திரன் கோடீஸ்வரன்**

**கௌரவ (திருமதி) எம்.ஏ.சீ.எஸ். சத்துரி கங்கானி**

**கௌரவ மனோ கணேசன்**

கௌரவ திலங்க யூ. கமகே

கௌரவ (திருமதி) நிலூஷா லக்மாலி கமகே

கௌரவ அஜந்த கம்மெத்தெகே

கௌரவ சதுர கலப்பத்தி

கௌரவ நிஹால் கலப்பத்தி

கௌரவ அஜித் கிஹான்

கௌரவ (டாக்டர்) ஜகத் குணவர்தன

கௌரவ (திருமதி) சமன்மலீ குணசிங்ஹ

கௌரவ அசோக குணசேன

கௌரவ டி.வீ. சானக

கௌரவ கயான் ஜனக

கௌரவ ருவன்திலக்க ஜயகொடி

கௌரவ நலீன் பண்டார ஜயமஹ

கௌரவ (டாக்டர்) கவிந்த ஹேஷான் ஜயவர்தன

கௌரவ திலித் ஜயவீர

கௌரவ (திருமதி) சட்டத்தரணி துஷாரி ஜயசிங்ஹ

கௌரவ ரீ.கே. ஜயசுந்தர

கௌரவ சட்டத்தரணி தயாசிறி ஜயசேக்கர

கௌரவ மயில்வாகனம் ஜெகதீஸ்வரன்

கௌரவ றஜீவன் ஜெயச்சந்திரமூர்த்தி

கௌரவ எம். ஏ. எம். தாஹிர்

கௌரவ (டாக்டர்) செல்லத்தம்பி திலகநாதன்

கௌரவ ஜீவன் தொண்டமான்

கௌரவ சாமர சம்பத் தசனாயக

கௌரவ சுகத் வசந்த த சில்வா

கௌரவ (கலாநிதி) ஹர்ஷ த சில்வா

கௌரவ தனுர திசாநாயக

கௌரவ தர்மப்பிரிய திசாநாயக்க

கௌரவ சுஜீவ திசாநாயக்க

கௌரவ டப்ளியூ.எச்.எம். தர்மசேன

கௌரவ சுசந்த குமார நவரத்ன

கௌரவ (பேராசிரியர்) சேன நாணாயக்கார

கௌரவ நந்தன பத்மகுமார

கௌரவ அருண பனாகொட

கௌரவ நிமல் பலிஹேன

கௌரவ நிஷாந்த பெரேரா

கௌரவ அஜித் பி. பெரேரா

கௌரவ கே. சுஜித் சஞ்ஜய பெரேரா

கௌரவ சட்டத்தரணி சித்ரால் பெர்னாந்து

கௌரவ ஸ்டெபனி பிரனாந்து
கௌரவ கந்தசாமி பிரபு
கௌரவ லால் பிரேமநாத்
கௌரவ ரோஹண பண்டார
கௌரவ நந்த பண்டார
கௌரவ பத்மசிரி பண்டார
கௌரவ ஆர். எம். ரஞ்சித் மத்தும பண்டார
கௌரவ ரவீந்திர பண்டார
கௌரவ றிஸாட் பதியுதீன்
கௌரவ சுதத் பலகல்ல
கௌரவ (டாக்டர்) எஸ். ஸ்ரீ பவானந்தராஜா
கௌரவ ஈ.எம். பஸ்நாயக
கௌரவ விஜேசிரி பஸ்நாயக்க
கௌரவ சுனில் பியன்வில
கௌரவ (டாக்டர்) சந்தருவன் மதரசிங்ஹ
கௌரவ லெப்டினன் கமாண்டர் (ஓய்வுபெற்ற) பிரகீத் மதுரங்க
கௌரவ ஜகத் மனுவர்ண
கௌரவ எஸ்.எம். மரிக்கார்
கௌரவ இம்ரான் மகரூப்
கௌரவ சானக மாதுகொட
கௌரவ ருவன் மாபலகம
கௌரவ (கலாநிதி) நந்தன மில்லகல
கௌரவ இஸ்மாயில் முத்து மொஹம்மட்
கௌரவ தனுஷ்க ரங்கனாத்
கௌரவ சஞ்ஜீவ ரணசிங்ஹ
கௌரவ சுனில் ரத்னசிரி
கௌரவ ஆர்.எம். காமிணி ரத்நாயக்க
கௌரவ மஞ்சுல சுகத் ரத்னாயக
கௌரவ சுரங்க ரத்நாயக்க
கௌரவ (திருமதி) ஏ.எம்.எம்.எம். ரத்வத்தே
கௌரவ அசோக சபுமல் ரன்வல
கௌரவ துரைராசா ரவிகரன்
கௌரவ முஜிபுர் ரஹுமான்
கௌரவ ஹர்ஷன ராஜகருணா
கௌரவ மனோஜ் ராஜபக்ஷ
கௌரவ சுனில் றாஜபக்ஷ
கௌரவ (கலாநிதி) வீ.எஸ். இராதாகிருஷ்ணன்
கௌரவ சாணக்கியன் ராஜபுத்திரன் இராசமாணிக்கம்
கௌரவ (திருமதி) சட்டத்தரணி ஹசாரா லியனகே

**கௌரவ (திருமதி) தீப்தி வாசலகே**

**கௌரவ கஞ்சன வெலிப்பிட்டிய**

**கௌரவ (திருமதி) ரோஹினீ குமாரி விஜேரத்ன**

**கௌரவ ஆர்.ஜீ. விஜேரத்ன**

**கௌரவ சட்டத்தரணி பிரியந்த விஜேரத்ன**

**கௌரவ ருவன் விஜேவீர**

**கௌரவ தர்மப்ரிய விஜேசிங்ஹ**

**கௌரவ (திருமதி) சட்டத்தரணி ஹிருனி விஜேசிங்ஹ**

**கௌரவ சமிந்த விஜேசிறி**

**கௌரவ அசித நிரோஷண எகொட வித்தான**

**கௌரவ ஜகத் விதான**

**கௌரவ அதுல வெலதகொட**

**கௌரவ ஞானமுத்து ஸ்ரீநேசன்**

**கௌரவ பஸ்மின் சரீப்**

**கௌரவ (டாக்டர்) பத்மநாதன் சத்தியலிங்கம்**

**கௌரவ திலிண சமரகோன்**

**கௌரவ (டாக்டர்) நிஷாந்த சமரவீர**

**கௌரவ (செல்வி) அம்பிகா சாமிவெல்**

**கௌரவ (டாக்டர்) இளையதம்பி சிறிநாத்**

**கௌரவ ஷாந்த பத்ம குமார சுபசிங்ஹ**

**கௌரவ தேவானந்த சுரவீர**

**கௌரவ சந்தன சூரியஆரச்சி**

**கௌரவ மேஜர் ஜெனரல் (ஓய்வுபெற்ற) ஜீ.டி.சூரியபண்டார**

**கௌரவ அரவிந்த செனரத்**

**கௌரவ கிட்ணன் செல்வராஜ்**

**கௌரவ (டாக்டர்) ஜனக சேனாரத்ன**

**கௌரவ (கலாநிதி) எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாஹ்**

**கௌரவ சந்திம ஹெட்டிஆரச்சி**

**கௌரவ சம்பிக ஹெட்டிஆரச்சி**

**கௌரவ தினிந்து சமன் ஹென்னாயக்க**

**கௌரவ (செல்வி) சட்டத்தரணி லக்மாலி ஹேமசந்திர**

**கௌரவ தினேஷ் ஹேமந்த**

**கௌரவ (திருமதி) சட்டத்தரணி கீதா ஹேரத்**

**கௌரவ சட்டத்தரணி பாக்ய ஸ்ரீ ஹேரத்**

**கௌரவ முஹம்மட் பைசல்**

**கௌரவ ரியாஸ் பாருக்**

திரு. சமிந்த குலரத்ன, பதிற் பாராளுமன்றச் செயலாளர் நாயகம்

திரு. ஹன்ஸ அபேரத்ன, உதவிச் செயலாளர் நாயகம்

**ஒத்திவைப்பின் பிரகாரம் பாராளுமன்றம் கூடியது. பிரதிச் சபாநாயகர் தலைமை தாங்கினார்.**

**1. சனாதிபதியின் செய்திகள்:** சனாதிபதியிடமிருந்து கிடைத்த பின்வரும் செய்தியைப் பிரதிச் சபாநாயகர் வாசித்தார்:—

ශ්‍රී ලංකා ජනාධිපති
இலங்கை சனாதிபதி
**President of Sri Lanka**

எனது இல: பிஎஸ்/சிஎஸ்ஏ/00/7/IX/3/01

2025 மார்ச் மாதம் 28 ஆந் திகதி

**கௌரவ ஜ.டபிள்யு.எம். ஜகத் விக்கிரமரத்ன அவர்கள்**
சபாநாயகர்
இலங்கை பாராளுமன்றம்

மாண்புமிகு சபாநாயகர் அவர்களே

**(40 ஆம் அத்தியாயமான) பொதுமக்கள் பாதுகாப்புக் கட்டளைச் சட்டம்**

(40 ஆம் அத்தியாயமான) பொதுமக்கள் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் 12 ஆம் பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பயனைக்கொண்டு, மக்களிடையே அமைதியைப் பேணுவதற்கான தேவையைக் கருத்திற்கொண்டு, முதலாம் அட்டவணையில் குறித்துரைத்துக் காட்டப்படும் ஆயுதந்தாங்கிய படையின் சகல உறுப்பினர்களும் அதன் இரண்டாம் அட்டவணையில் குறித்துரைத்துக் காட்டப்பட்ட பிரதேசங்களில் மக்களிடையே அமைதியைப் பேணுவதற்காக அழைக்கப்படுகின்றனர் என ஆணையிடப்பட்டுள்ளது.

அதற்கமைய, மேற்படி கட்டளைச் சட்டத்தின் 21(2) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2(3) பிரிவுக்கமைய அதனை இத்தால் பாராளுமன்றத்துக்கு அறிவிக்கின்றேன்.

இங்ஙனம் - அன்புள்ள

அநுர குமார திசாநாயக்க
சனாதிபதி

ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජය
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு
Democratic Socialist Republic of Sri Lanka

**2. சபாநாயகரின் அறிவித்தல்கள்:** பிரதிச் சபாநாயகர் பின்வருமாறு அறிவித்தல் விடுத்தார்:—

I

"இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 79 ஆம் இலக்க உறுப்புரையின் பிரகாரம், 2025 மார்ச் 21 ஆம் திகதி 'ஒதுக்கீடு' எனும் சட்டமூலத்தில் கௌரவ சபாநாயகர் அவர்களால் சான்றுரை எழுதப்பட்டதென்பதை அறிவிக்க விரும்புகின்றேன்."

II

"அரசியலமைப்பின் 121(1) ஆம் உறுப்புரையின் பிரகாரம் ' சேர்பெறுமதி வரி (திருத்தம்)' எனும் சட்டமூலம் தொடர்பாக உயர் நீதிமன்றத்தில் சவாலுக்குற்படுத்தப்பட்ட மனு மீதான உயர்நீதிமன்றத்தின் தீர்மானமானது கௌரவ சபாநாயகருக்கு கிடைக்கப்பெற்றுள்ளது என்பதை பாராளுமன்றத்திற்கு அறிவிக்க விரும்புகின்றேன்.

அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட உறுதிமொழியினைக் கருத்திற்கொண்டு மனுதாரர்கள் S.C. (SD) 05/2025 மற்றும் S.C. (SD) 06/2025 ஆகிய இரு மனுக்களையும் தொடருவதில்லை என முடிவு செய்துள்ளதால் குறித்த சட்டமூலத்தின் அரசியலமைப்புடன் இணங்கும் தன்மை தொடர்பாக உயர் நீதிமன்றம் தீர்மானமொன்றை வழங்கவில்லை என உயர்நீதிமன்றம் தெரிவித்துள்ளது.

உயர் நீதிமன்றத்தின் தீர்மானத்தை இன்றைய கூட்ட நடவடிக்கைகள் பற்றிய அதிகார அறிக்கையில் பதிப்பிட வேண்டுமென நான் கட்டளையிடுகின்றேன்."

III

"கேகாலை தேர்தல் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ கோசல நுவன் ஜயவீர அவர்களது மறைவினால் அரசியலமைப்பின் 66(அ) உறுப்புரையின் பிரகாரம் 2025 ஏப்ரல் 06 ஆம் திகதியிலிருந்து இப்பாராளுமன்றத்தின் உறுப்புரிமையில் வெற்றிடமொன்று ஏற்பட்டுள்ளதாக இச்சபைக்கு தெரிவிக்க விரும்புகிறேன்.

அவர்களது மறைவினை இப்பாராளுமன்றத்திற்கு நான் மிகவும் கவலையுடன் அறியத்தருகின்றேன். அவரது மறைவினால் எமக்கு ஏற்பட்ட இழப்பு குறித்து நாம் அதிகம் வருந்துவதோடு இந்த கௌரவ உறுப்பினரின் குடும்பத்தினருக்கு பாராளுன்றம் சார்பில் எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக்கொள்வதாக நான் அறிவிக்க விரும்புகின்றேன்.

இது தொடர்பான அனுதாபப் பிரேரணை பின்னர் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும்."

**3. பத்திரங்கள் சமர்ப்பித்தல்:** (1) பிரதிச் சபாநாயகர், இலங்கைச் சனநாயகச் சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையின் பிரகாரம் —

(i) 2019 ஆம் நிதி ஆண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையின் இரண்டாவது தொகுதியின் LVII ஆம் பகுதியையும் மற்றும் ஒன்பதாவது தொகுதியின் XLIV ஆம் பகுதியையும்;

(ii) 2021 ஆம் நிதி ஆண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையின் இரண்டாவது தொகுதியின் LX ஆம் பகுதியையும்; மற்றும்

(iii) 2023 ஆம் நிதி ஆண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையின் இரண்டாவது தொகுதியின் XXXIX மற்றும் ஒன்பதாவது தொகுதியின் XXII ஆம் பகுதியையும்

ஆகியவற்றைச் சமர்ப்பித்தார்.

மேற்படி அறிக்கைகள் **சபாபீடத்திலிடப்பட** வேண்டுமெனவும் அச்சிடப்பட வேண்டுமெனவும் கட்டளையாயிற்று.

(2) பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சர்—

(i) 2023 ஆம் ஆண்டுக்கான மொரட்டுவைப் பல்கலைக்கழகத்தின் தொழில்நுட்ப நிறுவனத்தின் ஆண்டறிக்கையும் வருடாந்த கணக்கறிக்கையும்;

(ii) 2023 ஆம் ஆண்டுக்கான கொழும்புப் பல்கலைக்கழகத்தின் தேசிய நூலகம் மற்றும் தகவல் அறிவியல் நிறுவனத்தின் ஆண்டறிக்கை;

(iii) 2023 ஆம் ஆண்டுக்கான கொழும்புப் பல்கலைக்கழகத்தின் மருத்துவப் பட்டப்பின் படிப்பு நிறுவனத்தின் ஆண்டறிக்கை;

(iv) 2023 ஆம் ஆண்டுக்கான கட்புல அரங்கக் கலைப் பல்கலைக்கழகத்தின் ஆண்டறிக்கை; மற்றும்

(v) 2023 ஆம் ஆண்டுக்கான பேராதனைப் பல்கலைக்கழகத்தின் விஞ்ஞான பட்டப்பின்படிப்பு நிறுவகத்தின் வருடாந்த அறிக்கையும் கணக்குகளும்

ஆகியவற்றைச் சமர்ப்பித்து அவ்வறிக்கைகள் கல்வி, ஊழியப் படை மற்றும் மனித மூலதனம் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(3) பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சர், 2023 ஆம் ஆண்டுக்கான நிருவாக மேன்முறையீடுகள் நியாயசபையின் செயலாற்றுகை அறிக்கையைச் சமர்ப்பித்து அவ்வறிக்கை ஆளுகை, நீதி மற்றும் சிவில் பாதுகாப்பு பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(4) பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சர், அரசாங்க கணக்குகள் பற்றிய குழுவினால் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையில் நீதிச் சேவை ஆணைக்குழுச் செயலகம் தொடர்பில் குறிப்பிடப்பட்ட விடயங்கள் தொடர்பான 119(4) ஆம் பாராளுமன்ற நிலையியற் கட்டளையின் பிரகாரம், அவதானிப்புக்கள் மற்றும் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் தொடர்பான அறிக்கையைச் சமர்ப்பித்து அவ்வறிக்கை அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(5) பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சர், 2002 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க நலன்புரி அனுகூலங்கள் சட்டத்தின் 9 ஆம் பிரிவின் கீழ் நலன்புரி அனுகூலங்கள் தொடர்பில் நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சரால் விதிக்கப்பட்டு 2025 மார்ச் 24 ஆம் திகதிய 2429/02 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட அஸ்வெசும நலன்புரி அனுகூலங்கள் கொடுப்பனவுத் திட்டத்தினைச் சமர்ப்பித்து அக்கொடுப்பனவுத் திட்டம் அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(6) போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சர், 2023 ஆம் ஆண்டுக்கான தேசிய போக்குவரத்து மருத்துவ நிறுவகத்தின் ஆண்டறிக்கையைச் சமர்ப்பித்து அவ்வறிக்கை உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் மூலோபாய அபிவிருத்தி பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(7) வெளிநாட்டலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலா அமைச்சர், 2023 ஆம் ஆண்டுக்கான இலங்கை இணக்கப்பாட்டுப் பணியகத்தின் வருடாந்த அறிக்கையைச் சமர்ப்பித்து அவ்வறிக்கை பொருளாதார அபிவிருத்தி மற்றும் சர்வதேச உறவுகள் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(8) கைத்தொழில் மற்றும் தொழில் முயற்சியாண்மை அபிவிருத்தி அமைச்சர், 2022 ஆம் ஆண்டுக்கான வரையறுக்கப்பட்ட லங்கா சீனி (தனியார்) கம்பனியின் ஆண்டறிக்கையைச் சமர்ப்பித்து அவ்வறிக்கை பொருளாதார அபிவிருத்தி மற்றும் சர்வதேச உறவுகள் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(9) சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடக அமைச்சர், 2022 ஆம் ஆண்டுக்கான இலங்கை தேசிய நீரியல் வாழ் செய்கை அபிவிருத்தி அதிகாரசபையின் வருடாந்த அறிக்கையைச் சமர்ப்பித்து அவ்வறிக்கை சுற்றாடல், கமத்தொழில் மற்றும் வளங்களின் நிலைத்தன்மை பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(10) பொதுநிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர், 2023 ஆம் ஆண்டுக்கான இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகத்தின் வருடாந்த அறிக்கையைச் சமர்ப்பித்து அவ்வறிக்கை ஆளுகை, நீதி மற்றும் சிவில் பாதுகாப்பு பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(11) சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடக அமைச்சர், 2021 ஆம் ஆண்டுக்கான கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகாரசபையின் ஆண்டறிக்கையைச் சமர்ப்பித்து அவ்வறிக்கை சுற்றாடல், கமத்தொழில் மற்றும் வளங்களின் நிலைத்தன்மை பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(12) மகளிர் மற்றும் சிறுவர் அலுவல்கள் அமைச்சர், அரசாங்க கணக்குகள் பற்றிய குழுவினால் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையில் மகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக வலுப்படுத்துகை அமைச்சு மற்றும் அதன் கீழுள்ள அப்போதைய நிறுவனங்கள் தொடர்பில் குறிப்பிடப்பட்ட விடயங்கள் தொடர்பான 119(4) ஆம் பாராளுமன்ற நிலையியற் கட்டளையின் பிரகாரம், அவதானிப்புக்கள் மற்றும் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் தொடர்பான அறிக்கையைச் சமர்ப்பித்து அவ்வறிக்கை அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(13) புத்த சாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர்—

(i) 2023 ஆம் ஆண்டுக்கான கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் செயலாற்றுகை அறிக்கை; மற்றும்

(ii) 2023 ஆம் ஆண்டுக்கான தொல்பொருளியல் திணைக்களத்தின் வருடாந்த செயலாற்றுகை அறிக்கை

ஆகியவற்றைச் சமர்ப்பித்து அவ்வறிக்கைகள் கல்வி, ஊழியப் படை மற்றும் மனித மூலதனம் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**4. குழுக்களின் அறிக்கைகள் சமர்ப்பித்தல்:** (1) நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழுவின் தவிசாளர் கௌரவ சட்டத்தரணி ஹர்ஷன நானாயக்கார அக்குழுவுக்கு ஆற்றுப்படுத்தப்பட்ட, 2013 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 7(2) ஆம் பிரிவின் கீழ் நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சரினால் விதிக்கப்பட்டு, 2025 சனவரி 08 ஆம் திகதிய 2418/28 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட கட்டளை தொடர்பான அக்குழுவின் அறிக்கையைச் சமர்ப்பித்தார்.

மேற்படி அறிக்கை **சபாபீடத்திலிடப்பட** வேண்டுமெனக் கட்டளையாயிற்று.

(2) ஆளுகை, நீதி மற்றும் சிவில் பாதுகாப்பு பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவின் தவிசாளர் கௌரவ (டாக்டர்) நஜீத் இந்திக்க அக்குழுவுக்கு ஆற்றுப்படுத்தப்பட்ட, குற்றச் செயல்களின் வரும்படிகள் பற்றிய சட்டமூலம் தொடர்பான அக்குழுவின் அறிக்கையைச் சமர்ப்பித்தார்.

மேற்படி அறிக்கை **சபாபீடத்திலிடப்பட** வேண்டுமெனக் கட்டளையாயிற்று.

(3) அரசாங்க பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழுவின் தவிசாளர், கௌரவ (டாக்டர்) நிஷாந்த சமரவீர அக்குழுவுக்கு ஆற்றுப்படுத்தப்பட்ட, பத்தாவது பாராளுமன்றத்தின் முதலாவது கூட்டத்தொடருக்கான அரசாங்க பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழுவின் அறிக்கையினை சிங்கள மொழியில் மாத்திரம் சபையின் விஷேட அங்கீகாரத்துடன் சமர்ப்பித்தார்.

மேற்படி அறிக்கை **சபாபீடத்திலிடப்பட** வேண்டுமெனவும் அச்சிடப்பட வேண்டுமெனவும் கட்டளையாயிற்று.

**5. பொது மனுக்கள் சமர்ப்பித்தல்:**

(1) (i) தங்காலை, சிட்டினாமலுவ எனும் முகவரியில் வதியும் திரு. பேர்ட்டி குமாரப்பெருமவினது 2025.01.08 ஆம் திகதியிடப்பட்ட மனுவையும்;

(ii) அம்பலாந்தொட்ட, மாமடல, பெமினியன்வில, கப்புகம கெதர எனும் முகவரியில் வதியும் திரு. டி.ஏ. கொடிதுவக்குவினது 2024.11.22 ஆம் திகதியிடப்பட்ட மனுவையும்;

(iii) பெலியத்த, நிஹிலுவ, 'ருசிரு' எனும் முகவரியில் வதியும் திரு. எச்.கே. சுனிலினது 2025.01.29 ஆம் திகதியிடப்பட்ட மனுவையும்;

(iv) ரன்ன, கஹந்தாவ, ரெக்கவ வீதி, இல. 151/1 இல் வதியும் திரு. எச்.ரீ.ஏ. திலகசிரியினது 2025.01.24 ஆம் திகதியிடப்பட்ட மனுவையும்;

(v) ஹக்குருவெல, கஜநாயககம, இத்த தெமலியே கெதர எனும் முகவரியில் வதியும் திருமதி எம். பேமவதியினது 2025.02.05 ஆம் திகதியிடப்பட்ட மனுவையும்;

(vi) திஸ்ஸமஹாராம, தெற்கு ரணகெலிய, புஸ்தோலமுல்ல எனும் முகவரியில் வதியும் திரு. சரத் குமார வன்னி ஆரச்சியினது 2025.01.07 ஆம் திகதியிடப்பட்ட மனுவையும்; மற்றும்

(vii) அம்பலாந்தொட்ட, பெரகம, கல்வெவ, இல. 248/2 இல் வதியும் திருமதி டப்ளியூ. ரூபிகாவினது 2025.02.06 ஆம் திகதியிடப்பட்ட மனுவையும்

கௌரவ நிஹால் கலப்பத்தி சமர்ப்பித்தார்.

(2) பாணந்துறை, நிர்மல மாவத்தை, இல. 5/4 ஏ ½ யில் வதியும் திரு. ஆர்.எம். திசாநாயக்கவினது 2025.02.11 ஆம் திகதியிடப்பட்ட மனுவை கௌரவ (திருமதி) சட்டத்தரணி நிலந்தி கொட்டஹச்சி சமர்ப்பித்தார்.

(3) தெனியாய, கொலவெனிகம, பள்ளேகம, பம்பரகொட எனும் முகவரியில்

வதியும் திருமதி கே.ஏ. நதுனி அஹிங்சாவினது 2025.01.31 ஆம் திகதியிடப்பட்ட மனுவை கௌரவ லால் பிரேமநாத் சமர்ப்பித்தார்.

மேற்படி மனுக்கள் பாராளுமன்ற நிலையியற் கட்டளை 30(10) இன் கீழ் பொது மனுக்கள் பற்றிய குழுவுக்கு ஆற்றுப்படுத்தப்பட்டன.

**6. குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (திருத்தம்):** நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சர் சமர்ப்பித்த சட்டமூலம்,— 1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவைச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டமூலம்.

இச் சட்டமூலம் 2025 மே 08 ஆம் திகதி வியாழக்கிழமை இரண்டாம் மதிப்பீடு செய்யப்படும் என்றும் இச் சட்டமூலம் அச்சிடப்பட வேண்டுமெனவும் ஆளுகை, நீதி மற்றும் சிவில் பாதுகாப்பு பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவுக்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனவும் கட்டளையாயிற்று.

**7. பாராளுமன்ற அமர்வுகள்**: பாராளுமன்றச் சபை முதல்வர் பின்வருமாறு பிரேரித்தார்,— பாராளுமன்ற நிலையியற் கட்டளை 8 இன் ஏற்பாடுகளினால் தடைபெறாமல், இன்றைய தினம் சபை அமர்வு நேரம் மு.ப. 9.30 மணி முதல் பி.ப. 12.30 மணி வரையும் மற்றும் பி.ப. 1.00 மணி முதல் பி.ப. 5.30 மணி வரையும் இருக்குமாக. பி.ப. 5.30 மணிக்கு சபாநாயகர் பாராளுமன்றத்தை ஒத்திவைப்பாராக.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**8. குற்றச் செயல்களின் வரும்படிகள் சட்டமூலம்:** இரண்டாம் மதிப்பீட்டுக்கான கட்டளை வாசிக்கப்பட்டது.

"சட்டமூலம் இப்பொழுது இரண்டாவது முறையாக மதிப்பிடப்பெறுமாக"என நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சர் பிரேரித்தார்.

(பி.ப. 1.00 மணிக்கு குழுக்களின் பிரதித் தவிசாளர் தலைமை தாங்கினார்.)

"கௌரவ (பேராசிரியர்) சேன நாணாயக்கார தலைமை தாங்குவாராக" என நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சர் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(பி.ப. 3.14 மணிக்கு கௌரவ (பேராசிரியர்) சேன நாணாயக்கார தலைமை தாங்கினார்.)

(பி.ப. 5.09 மணிக்கு பிரதிச் சபாநாயகர் தலைமை தாங்கினார்.)

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

அதன் பிரகாரம் சட்டமூலம் இரண்டாம் முறையாக மதிப்பிடப்பெற்றது.

"சட்டமூலம் முழுப்பாராளுமன்றக் குழுவின் பரிசீலனைக்கு விடப்படுமாக" என நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சர் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

உடனே பாராளுமன்றம் குழுவாக மாறியது.

(குழுவில்)

பிரதிச் சபாநாயகர் தலைமை தாங்கினார்.

1 முதல் 151 வரையிலான வாசகங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டன.

சட்டமாக்குவாசகமும் சட்டப்பெயரும்:

“சட்டமாக்குவாசகமும் சட்டப்பெயரும் சட்டமூலத்தின் ஒரு பகுதியாக இருக்க வேண்டுமென்ற” பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

சட்டமூலம் திருத்தங்களின்றி ஏற்றுக்கொள்ளப்பட்டதாக அறிவிக்கப்பட்டது.

“சட்டமூலம் இப்பொழுது மூன்றாவது முறையாக மதிப்பிடப்படுமாக”என நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சர் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

இதன்படி சட்டமூலம் மூன்றாம் முறையாக மதிப்பிடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**9. குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் கட்டளை:** நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சர் பின்வருமாறு பிரேரரித்தார்,— 2013 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 7(2) ஆம் பிரிவின் கீழ் நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சரினால் விதிக்கப்பட்டு, 2025 சனவரி 08 ஆம் திகதிய 2418/28 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2025.03.20 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**10. 2002 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க, அலுவலர்களை அகற்றுதல் (நடவடிக்கைமுறை) சட்டத்தின் 5 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும், 3(ஈ) மற்றும் 3 (உ) பிரிவுகளிற்கமைய, துர்நடத்தை மற்றும் பதவியின் தத்துவங்களை பாரதூரமாக துர்ப்பிரயோகம் செய்தமை காரணமாக, பொலிசுப் பரிசோதகர் தலைமையதிபதி ரி.எம்.டபிள்யூ. தேசபந்து தென்னகோனை பொலிசுப் பரிசோதகர் தலைமையதிபதி பதவியிலிருந்து நீக்குவதற்கு மேற்படி சட்டத்தின் 5 பிரிவின் பிரகாரம் விசாரணைக் குழுவொன்றை நியமிப்பதற்கான தீர்மானம்:** கௌரவ கயான் ஜனக அனுவதிக்க கௌரவ (செல்வி) சட்டத்தரணி லக்மாலி ஹேமசந்திர பிரேரித்த பிரேரணை,—

பொலிசுப் பரிசோதகர் தலைமையதிபதி ரி.எம்.டபிள்யூ. தேசபந்து தென்னகோன் (இதனகத்துப் பின்னர் தேசபந்து தென்னகோன் என குறிப்பிடப்படுகின்ற) ஒரு காலப் பகுதியில் மேல்மாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிசுப் பரிசோதகர் தலைமையதிபதியாகச் செயற்பட்டாரென்பதாதலாலும்;

குறித்த தேசபந்து தென்னகோன் முன்னாள் சனாதிபதியால் 2023-11-21 திகதியன்றோ அல்லது அதற்கண்மித்த திகதியொன்றிலோ பதில் பொலிசுப் பரிசோதகர் தலைமையதிபதியாக நியமிக்கப்பட்டாரென்பதாதலாலும்;

முன்னாள் சனாதிபதி, குறித்த நபரை பொலிசுப் பரிசோதகர் தலைமையதிபதியாக நியமிப்பதற்கு அரசியலமைப்பு பேரவை அங்கீகாரம் வழங்கியுள்ளதாகத் தெரிவித்து 2024-02-26 ஆம் திகதி முதல் அமுலுக்கு வரும் வகையில் தேசபந்து தென்னகோன் பொலிசுப் பரிசோதகர் தலைமையதிபதியாக நியமிக்கப்பட்டாரென்பதாதலாலும்;

தேசபந்து தென்னகோனை பொலிசுப் பரிசோதகர் தலைமையதிபதியாக நியமித்தமைக்கு, SC FR 67/2024, SC FR 68/2024, SC FR 71/2024, SC FR 72/2024, SC FR 75/2024, SC FR 79/2024, SC FR 80/2024, SC FR 82/2024 மற்றும் SC FR 84/2024 ஆகிய இலக்கங்களைக் கொண்ட ஒன்பது அடிப்படை உரிமை மீறல் மனுக்களூடாக பொதுமக்கள் பலர் உயர் நீதிமன்றத்தில் சவாலுக்குட்படுத்தியுள்ளனரென்பதாதலாலும்;

குறித்த தேசபந்து தென்னகோனை பொலிசுப் பரிசோதகர் தலைமையதிபதியாக நியமித்தமை அரசியலமைப்புக்கு ஏற்புடையதா என்பதனை கேள்விக்குட்படுத்தி முகத்தோற்ற அளவில் வழக்கெழு காரணியொன்று இருப்பதாக மேற்படி மனுதாரர்களால் வழக்கொன்றைத் தொடுத்ததன் அடிப்படையில் அரசியலமைப்பின் 12(1) ஆம்

உறுப்புரையின் பிரகாரம் மேற்படி அடிப்படை உரிமை மனுக்களைத் தொடர மனுதாரர்களுக்கு அனுமதி வழங்குவதற்கு உயர் நீதிமன்றம் முடிவு செய்து, உயர் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள சகல தகவல்களையும் சாட்சியங்களையும் கருத்திற் கொண்டு, அது 2024-07-24 ஆம் திகதிய உத்தரவின் மூலம் தீர்மானித்துள்ளதாலும் மற்றும் மேற்படி உத்தரவின் மூலம் குறித்த நியமனம் அரசியலமைப்பின் உரிய ஏற்பாடுகளுக்கு முரணானது என்பது உயர்நீதிமன்றத்தால் உணர்த்தப்படுகின்றதென்பதாதலாலும்;

மேற்குறிப்பிட்ட மனுதாரர்களால் முன்வைக்கப்பட்ட வலுவான முகத்தோற்ற அளவிலான வழக்கை பரிசீலித்த உயர் நீதிமன்றம், அந்த வழக்குகளின் இறுதித் தீர்மானம் வரை செல்லுபடியாகும் வகையில் பொலிசுப் பரிசோதகர் தலைமையதிபதி தனது பதவியின் அதிகாரங்களைப் பிரயோகிப்பதற்கும், கடமைகளையும் பொறுப்புகளையும் நிறைவேற்றுவதனைத் தடுக்கும் வகையில் தேசபந்து தென்னகோனுக்கு இடைக்கால தடையுத்தரவைப் பிறப்பிக்கவும் தீர்மானித்துள்ளதென்பதாதலாலும்;

அதன் பின்னர், உயர் நீதிமன்றத்தின் மேற்படி உத்தரவுக்கு இணங்க, சனாதிபதி, பொலிசுப் பரிசோதகர் தலைமையதிபதிப் பதவியின் தத்துவங்கள், கடமைகளையும் பொறுப்புகளையும் நிறைவேற்றுவதற்கு பதில் பொலிசுப் பரிசோதகர் தலைமையதிபதி ஒருவரை நியமித்துள்ளாரென்பதாதலாலும்;

குறித்த தேசபந்து தென்னகோன் பல முறைகேடுகள் மற்றும் அதிகார துர்ப்பிரயோகம் போன்ற பல சம்பவங்களில் ஈடுபட்டுள்ளார் என்பதாலும்; பொலிசுப் பரிசோதகர் தலைமையதிபதி பதவியை வகிக்கத் தகுதியற்றவர் என்பது தற்போது வெளிச்சத்துக்கு வந்துள்ள அதேவேளை, அவற்றின் முழுமையான விபரங்கள் பின்வருமாறு:-

01. 2023-12-30 அன்றோ அல்லது அதற்கு அண்மித்த திகதியொன்றிலோ, மேல்மாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிசுப் பரிசோதகர் தலைமையதிபதி மற்றும் பதில் பொலிசுப் பரிசோதகர் தலைமையதிபதி என்ற வகையில் குறித்த தேசபந்து தென்னகோன், கொழும்பு குற்றப்பிரிவைச் சேர்ந்த பிரதான பொலிஸ் பரிசோதகர் அனஸ்லெம் டி சில்வா, பொலிஸ் பரிசோதகர் மகேஷ் ருவன் துனுசிங்க, பொலிஸ் பரிசோதகர் ஜகத் நிஷாந்த, உப பொலிஸ் பரிசோதகர் ரொஷான் மதுரங்க, பொலிஸ் சார்ஜன்ட் 69480 பிரசாந்த குமார, பொலிஸ் சார்ஜன்ட் 57241 மனிங்கமுவ கெதர உபுல் சமிந்த குமார, பொலிஸ் கான்ஸ்டபிள் 2204 சுபுன் பிரியஷான், பொலிஸ் கான்ஸ்டபிள் சாரதி 89728 துலீப் கிஹான் பியதிஸ்ஸ எனும் பெயருடைய எட்டு உறுப்பினர்களைக் கொண்ட ஆயுதம் தாங்கிய பொலிஸ் உத்தியோகத்தர்களின் குழுவொன்றினை இரகசியமான முறையில் வெலிகம, பெலேனவிற்கு அனுப்புவதற்கு சட்டவிரோதமாக நடவடிக்கை மேற்கொண்டதன் மூலம், 2002 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க அலுவலர்களை அகற்றுதல் (நடவடிக்கைமுறை) சட்டத்தின் 3(ஈ) பிரிவின் பிரகாரம் துர்நடத்தையொன்றில் ஈடுபட்டுள்ளாரென்பதாதலாலும்;

02. 2023-12-30 அன்றோ அல்லது அதற்கு அண்மித்த திகதியொன்றிலோ, மேல்மாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிசுப் பரிசோதகர் தலைமையதிபதி மற்றும் பதில் பொலிசுப் பரிசோதகர் தலைமையதிபதி என்ற வகையில் குறித்த தேசபந்து தென்னகோன், கொழும்பு குற்றப்பிரிவுக்குட்பட்ட பிரதான பொலிஸ் பரிசோதகர் அனஸ்லெம் டி சில்வா, பொலிஸ் பரிசோதகர் மகேஷ் ருவன் துனுசிங்க, பொலிஸ் பரிசோதகர் ஜகத் நிஷாந்த, உப பொலிஸ் பரிசோதகர் ரொஷான் மதுரங்க, பொலிஸ் சார்ஜன்ட் 69480 பிரசாந்த குமார, பொலிஸ் சார்ஜன்ட் 57241 மனிங்கமுவ கெதர உபுல் சமிந்த குமார, பொலிஸ் கான்ஸ்டபிள் 2204 சுபுன் பிரியஷான், பொலிஸ் கான்ஸ்டபிள் சாரதி 89728 துலீப் கிஹான் பியதிஸ்ஸ எனும் பெயருடைய எட்டு உறுப்பினர்களைக் கொண்ட ஆயுதம் தாங்கிய பொலிஸ் உத்தியோகத்தர்களின் குழுவொன்றினை இரகசியமான முறையில் வெலிகம, பெலேனவிற்கு அனுப்புவதற்கு சட்டவிரோதமாக நடவடிக்கை மேற்கொண்டதன் மூலம், 2002 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க அலுவலர்களை அகற்றுதல் (நடவடிக்கைமுறை)

சட்டத்தின் 3(உ) பிரிவின் பிரகாரம் தமது பதவிக்குரிய தத்துவங்களை பாரதூரமான வகையில் துர்ப்பிரயோகம் செய்துள்ளாரென்பதாதலாலும்;

03. 2023-12-30 அன்றோ அல்லது அதற்கு அண்மித்த திகதியொன்றிலோ, மேல் மாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிசுப் பரிசோதகர் தலைமையதிபதி மற்றும் பதில் பொலிசுப் பரிசோதகர் தலைமையதிபதி என்ற ரீதியில் குறித்த தேசபந்து தென்னகோன், கொழும்பு குற்றத்தடுப்பு பிரிவைச் சேர்ந்த எட்டு பேர் அடங்கிய குறித்த ஆயுதமேந்திய பொலிஸ் குழுவை WP PK 7225 எனும் இலக்கம் கொண்ட பொலிஸ் வாகனத்தைப் பயன்படுத்தி இரகசியமான முறையில் வெலிகம, பெலேனவிற்கு செல்வதற்கு மற்றும் அவர்கள் சட்டவிரோதமான நடவடிக்கை ஒன்றில் அல்லது குற்றச் செயலொன்றில் ஈடுபடுவதற்கான வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல், அதாவது வெலிகம, பெலேனவில் அமைந்துள்ள W 15 விடுதிக்குச் சென்று இரகசியமான முறையில் துப்பாக்கிச் சூடு நடத்துவதற்கு சட்ட விரோதமான முறையில் ஈடுபடுத்தியுள்ளதன் மூலம் 2002 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க அலுவலர்களை அகற்றுதல் (நடவடிக்கைமுறை) சட்டத்தின் 3(ஈ) பிரிவின் பிரகாரம் துர்நடத்தையொன்றில் ஈடுபட்டுள்ளாரென்பதாதலாலும்;

04. 2023-12-30 அன்றோ அல்லது அதற்கு அண்மித்த திகதியொன்றிலோ, மேல் மாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிசுப் பரிசோதகர் தலைமையதிபதி மற்றும் பதில் பொலிசுப் பரிசோதகர் தலைமையதிபதி என்ற ரீதியில் குறித்த தேசபந்து தென்னகோன், கொழும்பு குற்றத்தடுப்பு பிரிவைச் சேர்ந்த எட்டு பேர் அடங்கிய குறித்த ஆயுதமேந்திய பொலிஸ் குழுவை WP PK 7225 எனும் இலக்கம் கொண்ட பொலிஸ் வாகனத்தைப் பயன்படுத்தி இரகசியமான முறையில் வெலிகம, பெலேனவிற்கு செல்வதற்கு மற்றும் அவர்கள் சட்டவிரோதமான நடவடிக்கை ஒன்றில் அல்லது குற்றச் செயலொன்றில் ஈடுபடுவதற்கான வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல், அதாவது வெலிகம, பெலேனவில் அமைந்துள்ள W 15 விடுதிக்குச் சென்று இரகசியமான முறையில் துப்பாக்கிச் சூடு நடத்துவதற்கு சட்ட விரோதமான முறையில் ஈடுபடுத்தியுள்ளதன் மூலம் 2002 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க அலுவலர்களை அகற்றுதல் (நடவடிக்கைமுறை) சட்டத்தின் 3(உ) பிரிவின் பிரகாரம் தமது பதவிக்குரிய தத்துவங்களை பாரதூரமான வகையில் துர்ப்பிரயோகம் செய்துள்ளாரென்பதாதலாலும்;

05. 2023-12-30 அன்றோ அல்லது அதற்கு அண்மித்த திகதியொன்றிலோ, மேல் மாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிசுப் பரிசோதகர் தலைமையதிபதி மற்றும் பதில் பொலிசுப் பரிசோதகர் தலைமையதிபதி என்ற ரீதியில் குறித்த தேசபந்து தென்னகோன், கொழும்பு குற்றத்தடுப்பு பிரிவைச் சேர்ந்த எட்டு பேர் அடங்கிய குறித்த ஆயுதமேந்திய பொலிஸ் குழுவை சட்டவிரோதமான நடவடிக்கையொன்றில் அல்லது குற்றச் செயலொன்றில் ஈடுபடுவதற்காக அதாவது வெலிகம, பெலேனவில் அமைந்துள்ள W 15 விடுதிக்குச் சென்று இரகசியமான முறையில் துப்பாக்கிச் சூடு நடத்துவதற்கு சட்ட விரோதமான முறையில் ஈடுபடுத்தியுள்ளதன் மூலம், 2002 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க அலுவலர்களை அகற்றுதல் (நடவடிக்கைமுறை) சட்டத்தின் 3(ஈ) பிரிவின் பிரகாரம் துர்நடத்தையொன்றில் ஈடுபட்டுள்ளாரென்பதாதலாலும்;

06. 2023-12-30 அன்றோ அல்லது அதற்கு அண்மித்த திகதியொன்றிலோ, மேல் மாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிசுப் பரிசோதகர் தலைமையதிபதி மற்றும் பதில் பொலிசுப் பரிசோதகர் தலைமையதிபதி என்ற ரீதியில் குறித்த தேசபந்து தென்னகோன், கொழும்பு குற்றத்தடுப்பு பிரிவைச் சேர்ந்த எட்டு பேர் அடங்கிய குறித்த ஆயுதமேந்திய பொலிஸ் குழுவை சட்டவிரோதமான நடவடிக்கையொன்றில் அல்லது குற்றச் செயலொன்றில் ஈடுபடுவதற்காக அதாவது வெலிகம, பெலேனவில் அமைந்துள்ள W 15 விடுதிக்குச் சென்று இரகசியமான முறையில் துப்பாக்கிச் சூடு நடத்துவதற்கு சட்ட விரோதமான முறையில் ஈடுபடுத்தியுள்ளதன்

மூலம், 2002 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க அலுவலர்களை அகற்றுதல் (நடவடிக்கைமுறை) சட்டத்தின் 3(உ) பிரிவின் பிரகாரம் தமது பதவிக்குரிய தத்துவங்களை பாரதூரமான வகையில் துர்ப்பிரயோகம் செய்துள்ளாரென்பதாதலாலும்;

07. 2023-12-30 அன்றோ அல்லது அதற்கு அண்மித்த திகதியொன்றிலோ, கொழும்பு குற்றத்தடுப்புப் பிரிவைச் சேர்ந்த எட்டு பேர் கொண்ட குறித்த ஆயுதமேந்திய பொலிஸ் உத்தியோகத்தர்களின் குழு, சட்டவிரோத நடவடிக்கை அல்லது குற்றச் செயல்களில் ஈடுபட்டதை, அதாவது, வெலிகம, பெலேனாவில் உள்ள W 15 விடுதிக்குச் சென்று இரகசியமான முறையில் துப்பாக்கிச் சூடு நடத்தியதை நன்கு அறிந்திருந்த, மேல் மாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிசுப் பரிசோதகர் தலைமையதிபதி மற்றும் பதில் பொலிசுப் பரிசோதகர் தலைமையதிபதி என்ற ரீதியில் குறித்த தேசபந்து தென்னகோன், அது சம்பந்தமாக எந்த நடவடிக்கையும் எடுக்கத் தவறியதன் மூலம் 2002 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க அலுவலர்களை அகற்றுதல் (நடவடிக்கைமுறை) சட்டத்தின் 3(ஈ) பிரிவின் பிரகாரம் துர்நடத்தையொன்றில் ஈடுபட்டுள்ளாரென்பதாதலாலும்;

08. 2023-12-30 அன்றோ அல்லது அதற்கு அண்மித்த திகதியொன்றிலோ, கொழும்பு குற்றத்தடுப்புப் பிரிவைச் சேர்ந்த எட்டு பேர் கொண்ட குறித்த ஆயுதமேந்திய பொலிஸ் உத்தியோகத்தர்களின் குழு, வெலிகம, பெலேனவில் உள்ள W 15 விடுதியில் சட்டவிரோத நடவடிக்கை அல்லது குற்றச் செயல்களில் ஈடுபட்டதை அதாவது, வெலிகம, பெலேனாவில் உள்ள W 15 விடுதிக்குச் சென்று இரகசியமான முறையில் துப்பாக்கிச் சூடு நடத்தியதை நன்கு அறிந்திருந்த, மேல் மாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிசுப் பரிசோதகர் தலைமையதிபதி மற்றும் பதில் பொலிசுப் பரிசோதகர் தலைமையதிபதி என்ற ரீதியில் குறித்த தேசபந்து தென்னகோன், அது சம்பந்தமாக எந்த நடவடிக்கையும் எடுக்கத் தவறியதன் மூலம் 2002 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க அலுவலர்களை அகற்றுதல் (நடவடிக்கைமுறை) சட்டத்தின் 3(உ) பிரிவின் பிரகாரம் தமது பதவிக்குரிய தத்துவங்களை பாரதூரமான வகையில் துர்ப்பிரயோகம் செய்துள்ளாரென்பதாதலாலும்;

09. 2023-12-30 அன்றோ அல்லது அதற்கு அண்மித்த திகதியொன்றிலோ, கொழும்பு குற்றப்பிரிவைச் சேர்ந்த ஆயுதமேந்திய பொலிஸ் உத்தியோகத்தர்களின் குறித்த குழுவில் இருவரான பொலிஸ் சார்ஜன்ட் 57241 மாணிங்கமுவ கெதர உபுல் சமிந்த குமார மற்றும் உப பொலிஸ் பரிசோதகர் ரொஷான் மதுரங்க ஆகியோர் வெலிகம, பெலேனவில் மேற்கூறிய சட்டவிரோத நடவடிக்கை அல்லது குற்றச் செயல்களில் ஈடுபடும் போது துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகியமை, நன்கு தெரிந்திருந்த, மேல் மாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிசுப் பரிசோதகர் தலைமையதிபதி மற்றும் பதில் பொலிசுப் பரிசோதகர் தலைமையதிபதி என்ற ரீதியில் குறித்த தேசபந்து தென்னகோன், அது தொடர்பில் எந்த நடவடிக்கையும் எடுக்கத் தவறியமை மூலம் 2002 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க அலுவலர்களை அகற்றுதல் (நடவடிக்கைமுறை) சட்டத்தின் 3(ஈ) பிரிவின் பிரகாரம் துர்நடத்தையொன்றில் ஈடுபட்டுள்ளாரென்பதாதலாலும்;

10. 2023-12-30 அன்றோ அல்லது அதற்கு அண்மித்த திகதியொன்றிலோ, கொழும்பு குற்றப்பிரிவைச் சேர்ந்த ஆயுதமேந்திய பொலிஸ் உத்தியோகத்தர்களில் இருவரான பொலிஸ் சார்ஜன்ட் 57241 மாணிங்கமுவ கெதர உபுல் சமிந்த குமார மற்றும் உப பொலிஸ் பரிசோதகர் ரொஷான் மதுரங்க ஆகியோர் வெலிகம, பெலேனவில் மேற்கூறிய சட்டவிரோத நடவடிக்கை அல்லது குற்றச் செயல்களில் ஈடுபடும் போது துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகியமை நன்கு தெரிந்திருந்த, மேல் மாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிசுப் பரிசோதகர் தலைமையதிபதி மற்றும் பதில் பொலிசுப் பரிசோதகர் தலைமையதிபதி என்ற ரீதியில் குறித்த தேசபந்து தென்னகோன், அது தொடர்பில் எந்த நடவடிக்கையும் எடுக்கத் தவறியமை மூலம் 2002 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க அலுவலர்களை அகற்றுதல் (நடவடிக்கைமுறை) சட்டத்தின் 3(உ) பிரிவின் பிரகாரம் தமது பதவிக்குரிய தத்துவங்களை பாரதூரமான வகையில் துர்ப்பிரயோகம் செய்துள்ளாரென்பதாதலாலும்;

11. 2023-12-30 அன்றோ அல்லது அதற்கு அண்மித்த திகதியொன்றிலோ, கொழும்பு குற்றப்பிரிவைச் சேர்ந்த குறித்த ஆயுதமேந்திய பொலிஸ் உத்தியோகத்தர்களில் இருவரான பொலிஸ் சார்ஜன்ட் 57241 மாணிங்கமுவ கெதர உபுல் சமிந்த குமார மற்றும் உப பொலிஸ் பரிசோதகர் ரொஷான் மதுரங்க ஆகியோர் வெலிகம, பெலேனவில் மேற்கூறிய சட்டவிரோத நடவடிக்கை அல்லது குற்றச் செயல்களில் ஈடுபடும் போது துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகியமை நன்கு தெரிந்திருந்த, மேல் மாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிசுப் பரிசோதகர் தலைமையதிபதி மற்றும் பதில் பொலிசுப் பரிசோதகர் தலைமையதிபதி என்ற ரீதியில் குறித்த தேசபந்து தென்னகோன், காயமடைந்தவர்களை அருகில் உள்ள மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லாமல், இரகசியமாக கொழும்புக்குத் திரும்புமாறு மேற்படி ஆயுதமேந்திய பொலிஸ் உத்தியோகத்தர் குழுவின் ஏனைய உறுப்பினர்களுக்கு பணிப்புரை விடுத்துள்ளதன் மூலம், 2002 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க அலுவலர்களை அகற்றுதல் (நடவடிக்கைமுறை) சட்டத்தின் 3(ஈ) பிரிவின் பிரகாரம் துர்நடத்தையொன்றில் ஈடுபட்டுள்ளாரென்பதாதலாலும்;

12. 2023-12-30 அன்றோ அல்லது அதற்கு அண்மித்த திகதியொன்றிலோ, கொழும்பு குற்றப்பிரிவைச் சேர்ந்த குறித்த ஆயுதமேந்திய பொலிஸ் உத்தியோகத்தர்களில் இருவரான பொலிஸ் சார்ஜன்ட் 57241 மாணிங்கமுவ கெதர உபுல் சமிந்த குமார மற்றும் உப பொலிஸ் பரிசோதகர் ரொஷான் மதுரங்க ஆகியோர் வெலிகம, பெலேனவில் மேற்கூறிய சட்டவிரோத நடவடிக்கை அல்லது குற்றச் செயல்களில் ஈடுபடும் போது துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகியமை, நன்கு தெரிந்திருந்த, மேல் மாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிசுப் பரிசோதகர் தலைமையதிபதி மற்றும் பதில் பொலிசுப் பரிசோதகர் தலைமையதிபதி என்ற ரீதியில் குறித்த தேசபந்து தென்னகோன், காயமடைந்தவர்களை அருகில் உள்ள மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லாமல், இரகசியமாக கொழும்புக்குத் திரும்புமாறு மேற்படி ஆயுதமேந்திய பொலிஸ் உத்தியோகத்தர் குழுவின் ஏனைய உறுப்பினர்களுக்கு பணிப்புரை விடுத்துள்ளதன் மூலம், 2002 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க அலுவலர்களை அகற்றுதல் (நடவடிக்கைமுறை) சட்டத்தின் 3(உ) பிரிவின் பிரகாரம் தமது பதவிக்குரிய தத்துவங்களை பாரதூரமான வகையில் துர்ப்பிரயோகம் செய்துள்ளாரென்பதாதலாலும்;

13. 2023-12-30 அன்றோ அல்லது அதற்கு அண்மித்த திகதியொன்றிலோ, மேல் மாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிசுப் பரிசோதகர் தலைமையதிபதி மற்றும் பதில் பொலிசுப் பரிசோதகர் தலைமையதிபதி என்ற ரீதியில் குறித்த தேசபந்து தென்னகோன், கொழும்பு குற்றப்பிரிவைச் சேர்ந்த குறித்த ஆயுதமேந்திய பொலிஸ் உத்தியோகத்தர்களின் குழுவின் ஏனைய உறுப்பினர்களுடன் சதி செய்து, அவர்கள் சட்டவிரோத நடவடிக்கை அல்லது குற்றச் செயல்களில் ஈடுபடுவதற்கு வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்து, அதாவது, வெலிகம, பெலேனவில் உள்ள W 15 விடுதியில் துப்பாக்கிச் சூடு நடத்துவதற்கு அவர்களுக்கு உதவி, உடந்தையாயிருந்ததன் மூலம், 2002 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க அலுவலர்களை அகற்றுதல் (நடவடிக்கைமுறை) சட்டத்தின் 3(ஈ) பிரிவின் பிரகாரம் துர்நடத்தையொன்றில் ஈடுபட்டுள்ளாரென்பதாதலாலும்;

14. மேல் மாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிசுப் பரிசோதகர் தலைமையதிபதி மற்றும் பதில் பொலிசுப் பரிசோதகர் தலைமையதிபதி என்ற ரீதியில் குறித்த தேசபந்து தென்னகோன், கொழும்பு குற்றப்பிரிவைச் சேர்ந்த குறித்த ஆயுதமேந்திய பொலிஸ் உத்தியோகத்தர்களின் குழுவின் ஏனைய உறுப்பினர்களுடன் சதி செய்து, அவர்கள் சட்டவிரோத நடவடிக்கை அல்லது குற்றச் செயல்களில் ஈடுபடுவதற்கு வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்து, அதாவது, வெலிகம, பெலேனவில் உள்ள W 15 விடுதியில் துப்பாக்கிச் சூடு நடத்துவதற்கு அவர்களுக்கு உதவி, உடந்தையாயிருந்ததன் மூலம், 2002 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க அலுவலர்களை அகற்றுதல் (நடவடிக்கைமுறை) சட்டத்தின் 3(உ) பிரிவின் பிரகாரம் தமது பதவிக்குரிய தத்துவங்களை பாரதூரமான வகையில் துர்ப்பிரயோகம் செய்துள்ளாரென்பதாதலாலும்;

15. 2023-12-30 அன்றோ அல்லது அதற்கு அண்மித்த திகதியொன்றிலோ, மேல் மாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிசுப் பரிசோதகர் தலைமையதிபதி மற்றும் பதில் பொலிசுப் பரிசோதகர் தலைமையதிபதி என்ற ரீதியில் குறித்த தேசபந்து தென்னகோன், கொழும்பு குற்றப்பிரிவைச் சேர்ந்த மேற்படி ஆயுதமேந்திய பொலிஸ் அலுவலர்கள் குழுவின் ஏனைய உறுப்பினர்களுடன் சதி செய்து, அவர்களை சட்டவிரோதமான, குற்றச் செயல்களில் ஈடுபடுவதற்கு வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்து அதாவது, வெலிகம, பெலேனவிற்கு செல்வதற்கு அவர்களுக்கு உதவி, உடந்தையாயிருந்ததன் மூலம், 2002 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க அலுவலர்களை அகற்றுதல் (நடவடிக்கைமுறை) சட்டத்தின் 3(ஈ) பிரிவின் பிரகாரம் துர்நடத்தையொன்றில் ஈடுபட்டுள்ளாரென்பதாதலாலும்;

16. 2023-12-30 அன்றோ அல்லது அதற்கு அண்மித்த திகதியொன்றிலோ, மேல் மாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிசுப் பரிசோதகர் தலைமையதிபதி மற்றும் பதில் பொலிசுப் பரிசோதகர் தலைமையதிபதி என்ற ரீதியில் குறித்த தேசபந்து தென்னகோன், கொழும்பு குற்றப்பிரிவைச் சேர்ந்த மேற்படி ஆயுதமேந்திய பொலிஸ் அலுவலர்கள் குழுவின் ஏனைய உறுப்பினர்களுடன் சதி செய்து, அவர்களை சட்டவிரோதமான, குற்றச் செயல்களில் ஈடுபடுவதற்கு வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்து அதாவது, வெலிகம, பெலேனவிற்கு செல்வதற்கு அவர்களுக்கு உதவி, உடந்தையாயிருந்ததன் மூலம், 2002 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க அலுவலர்களை அகற்றுதல் (நடவடிக்கைமுறை) சட்டத்தின் 3(உ) பிரிவின் பிரகாரம் தமது பதவிக்குரிய தத்துவங்களை பாரதூரமான வகையில் துர்ப்பிரயோகம் செய்துள்ளாரென்பதாதலாலும்;

17. 2025-02-27 ஆம் திகதி தொடக்கம் 2025-03-19 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் பொலிசுப் பரிசோதகர் தலைமையதிபதியாக இருந்த குறித்த தேசபந்து தென்னகோன், மாத்தறை கௌரவ நீதவான் அவர்களால் 2025-02-27 ஆம் திகதி, B R 6314/2023 ஆம் இலக்க வழக்கில் வழங்கப்பட்ட கட்டளைகள் மற்றும் அந்த வழக்கில் பிடியாணை பிறப்பித்தல் உட்பட ஏனைய இடைநேர்விளைவான கட்டளைகளுக்கு கீழ்ப்படியாமல் தலைமறைவாகியிருந்தமை மூலம், 2002 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க அலுவலர்களை அகற்றுதல் (நடவடிக்கைமுறை) சட்டத்தின் 3(ஈ) பிரிவின் பிரகாரம் துர்நடத்தையொன்றாகக் கருதப்படும் பொலிசுப் பரிசோதகர் தலைமையதிபதி பதவிக்கு தகுதியற்ற மற்றும் பொருத்தமற்ற ஒரு செயலைச் செய்துள்ளாரென்பதாதலாலும்;

18. 2025-02-27 ஆம் திகதி தொடக்கம் 2025-03-19 ஆம் திகதி வரையான காலப் பகுதியில் பொலிசுப் பரிசோதகர் தலைமையதிபதியாக இருந்த குறித்த தேசபந்து தென்னகோன், மாத்தறை கௌரவ நீதவான் அவர்களால் 2025-02-27 ஆந் திகதி, B R 6314/2023 ஆம் இலக்க வழக்கில் வழங்கப்பட்ட கட்டளைகள் மற்றும் அந்த வழக்கில் பிடியாணை பிறப்பித்தல் உட்பட ஏனைய இடைநேர்விளைவான கட்டளைகளுக்கு கீழ்ப்படியாமல் தலைமறைவாகியிருந்தமை மூலம், 2002 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க அலுவலர்களை அகற்றுதல் (நடவடிக்கைமுறை) சட்டத்தின் 3(உ) பிரிவின் பிரகாரம் தமது பதவிக்குரிய தத்துவங்களை பாரதூரமான வகையில் துர்ப்பிரயோகம் செய்துள்ளாரென்பதாதலாலும்;

19. 2025-02-27 ஆம் திகதி தொடக்கம் 2025-03-19 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் பொலிசுப் பரிசோதகர் தலைமையதிபதியாக இருந்த குறித்த தேசபந்து தென்னகோன், மாத்தறை கௌரவ நீதவான் அவர்களால் 2025-02-27 ஆம் திகதி, B R 6314/2023 ஆம் இலக்க வழக்கில் வழங்கப்பட்ட கட்டளைகள் மற்றும் அந்த வழக்கில் கௌரவ மாத்தறை நீதவான் அவர்களால் அவ்வப்போது பிறப்பிக்கப்பட்ட பிடியாணைகள் உட்பட ஏனைய இடைநேர்விளைவான கட்டளைகளுக்கு கீழ்ப்படியத் தவறியுள்ளமையாலும், இடம்பெற்றுக்

கொண்டிருக்கும் முறையான சட்டச் செயன்முறைகளுக்கு பாதிப்பை ஏற்படுத்தும் வகையில் தலைமறைவாகியிருந்ததாகவும், சட்டவாட்சி, நீதி மற்றும் சட்ட அமுலாக்கம், சட்டத்தினை பாதுகாக்கும் பணி ஒப்படைக்கப்பட்டுள்ள பொலிஸ் திணைக்களத்தின் புகழுருவுக்கும் நற்பெயருக்கும் களங்கத்தை ஏற்படுத்தி, ஒட்டமொத்த பொலிஸ் திணைக்களத்தின் மற்றும் நீதிமன்றக் கட்டமைப்பின் மீதான பொதுமக்களின் நம்பிக்கையை சிதைப்பதற்கு ஏதுவாகியதன் மூலம், 2002 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க அலுவலர்களை அகற்றுதல் (நடவடிக்கைமுறை) சட்டத்தின் 3(ஈ) பிரிவின் பிரகாரம் துர்நடத்தையொன்றாகக் கருதப்படும் பொலிசுப் பரிசோதகர் தலைமையதிபதி பதவிக்கு தகுதியற்ற மற்றும் பொருத்தமற்ற செயலைச் செய்ததுள்ளாரென்பதாதலாலும்;

20. 2022-05-09 ஆம் திகதியன்று மேல் மாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிசுப் பரிசோதகர் தலைமையதிபதி என்ற ரீதியில் குறித்த தேசபந்து தென்னகோன், MC Fort வழக்கு இல. B 22046/2022 இல் சந்தேக நபர்களான, லியனாரச்சிகே நிஷாந்த மெண்டிஸ், சுதுவதேவகே சுபாஷ் ஜயஷாந்த பெர்னாண்டோ, சிங்ஹார அமல் புஷ்பகுமார த சில்வா, விதான பதிரனகே மிலான் சஜித் ஜயதிலக, குருகமகே சனத் நிஷாந்த பெரேரா, லியனகே அபேரத்ன சுரேஷ் பிரியசாத் எனும் டான் பிரியசாத், வன்னக்குவடுகே சமன்லால் பெர்னாண்டோ, கம்லத் ஜயந்த ரோஹண, லியனகே கீதக பெரேரா, ஜயமான்ன கங்கானம்லாகே பந்துல விஜேகுமார, புஷ்பலால் குமாரசிரி, அமிதானந்த அபேவிக்ரம, கொம்பன்னாகே மிணி பிரசாந்தி பொன்சேகா எனும் வெல்லே ரமணி, அசங்க நாயக விஜேசிங்க என்கிற சதா நாலக்க எனும் அராபி வசந்த, கெஸ்பலாகே டொன் அருண பிரியசாந்த, அஜந்தா லியனகே, கோனியமாலிகே சுபெம்சிரி அபொன்சு, சமரக்கொடி ஜயலத் வசந்தா சரோஜினி ஜயலத் எனும் ஹந்தபாங்கொட, தெல்கே ஆரியதாச பீரிஸ், கீரிகம பமுனுவகே நரேந்திர துலிப் பெர்னாண்டோ, கஹந்தகமகே மஹிந்தரத்ன, நிஷாந்த சாமின் உபதிஸ்ஸ ஜயசிங்க, ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ, குருப்புஆரச்சிகே டொன் சஜித் சாரங்க, ரணபாகு முதியன்சேலாகே துசித சம்பத் நானாயக்கார, ஹொரணகே பிரதீப் சிரியந்த பெர்னாண்டோ, லியனகே ஷானக அன்டனி பெர்னாண்டோ, மகாவத்தகே பிரியனாத் மக்கென்சி பெர்னாண்டோ, பபினா ஹென்னதிகே கயான் புஸ்பகுமார பீரிஸ், கபுவத்தகெதர பிரகீத் சுஜீவ பண்டார, குருப்பு முதியன்சேலாகே லலித் உதேஷ் மதுபானு ஆகிய சில ஆட்களில் தண்டனைச் சட்டக்கோவையின் 314, 316, 343, மற்றும் 300 ஆகிய பிரிவுகளின் கீழ் தண்டனைக்குரிய குற்றங்களைச் செய்வதைத் தடுக்க நடவடிக்கை எடுக்கத் தவறியமை அல்லது அலட்சியம் செய்ததன் மூலம், 2002 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க அலுவலர்களை அகற்றுதல் (நடவடிக்கைமுறை) சட்டத்தின் 3(ஈ) பிரிவின் பிரகாரம் துர்நடத்தையொன்றில் ஈடுபட்டுள்ளாரென்பதாதலாலும்;

21. 2022-05-09 ஆம் திகதியன்று மேல் மாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிசுப் பரிசோதகர் தலைமையதிபதி என்ற ரீதியில் குறித்த தேசபந்து தென்னகோன், MC Fort வழக்கு இல. B 22046/2022 இல் சந்தேக நபர்களான, லியனாரச்சிகே நிஷாந்த மெண்டிஸ், சுதுவதேவகே சுபாஷ் ஜயஷாந்த பெர்னாண்டோ, சிங்ஹார அமல் புஷ்பகுமார த சில்வா, விதான பதிரனகே மிலான் சஜித் ஜயதிலக, குருகமகே சனத் நிஷாந்த பெரேரா, லியனகே அபேரத்ன சுரேஷ் பிரியசாத் எனும் டான் பிரியசாத், வன்னக்குவடுகே சமன்லால் பெர்னாண்டோ, கம்லத் ஜயந்த ரோஹண, லியனகே கீதக பெரேரா, ஜயமான்ன கங்கானம்லாகே பந்துல விஜேகுமார, புஷ்பலால் குமாரசிரி, அமிதானந்த அபேவிக்ரம, கொம்பன்னாகே மிணி பிரசாந்தி பொன்சேகா எனும் வெல்லே ரமணி, அசங்க நாயக விஜேசிங்க எனும் சதா நாலக்க எனும் அராபி வசந்த, கெஸ்பலாகே டொன் அருண பிரியசாந்த, அஜந்தா லியனகே, கோனியமாலிகே சுபெம்சிரி அபொன்சு, சமரக்கோடி ஜயலத் வசந்தா சரோஜினி ஜயலத் எனும் ஹந்தபாங்கொட, தெல்கே ஆரியதாச பீரிஸ், கீரிகம பமுனுவகே நரேந்திர துலிப் பெர்னாண்டோ, கஹந்தகமகே மஹிந்தரத்ன, நிஷாந்த சாமின் உபதிஸ்ஸ ஜயசிங்க, ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ, குருப்புஆரச்சிகே டொன் சஜித் சாரங்க, ரணபாகு

முதியன்சேலாகே துசித சம்பத் நானாயக்கார, ஹொரணகே பிரதீப் சிரியந்த பெர்னாண்டோ, லியனகே ஷானக அன்டனி பெர்னாண்டோ, மகாவத்தகே பிரியனாத் மக்கென்சி பெர்னாண்டோ, பபினா ஹென்னதிகே கயான் புஸ்பகுமார பீரிஸ், கபுவத்தகெதர பிரகீத் சுஜீவ பண்டார, குருப்பு முதியன்சேலாகே லலித் உதேஷ் மதுபானு ஆகிய சில ஆட்களில் தண்டனைச் சட்டக்கோவையின் 314, 316, 343, மற்றும் 300 ஆகிய பிரிவுகளின் கீழ் தண்டனைக்குரிய குற்றங்களைச் செய்வதைத் தடுக்க நடவடிக்கை எடுக்கத் தவறியமை அல்லது அலட்சியம் செய்ததன் மூலம், 2002 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க அலுவலர்களை அகற்றுதல் (நடவடிக்கைமுறை) சட்டத்தின் 3 (உ) ஆம் பிரிவின் பிரகாரம் தமது பதவிக்குரிய தத்துவங்களை பாரதூரமான வகையில் துர்ப்பிரயோகம் செய்துள்ளாரென்பதாதலாலும்;

22. முழு நாட்டின் சட்டத்தையும் ஒழுங்கையும் பேணும் கடமை ஒப்படைக்கப்பட்ட, நாட்டின் பொலிசுப் பரிசோதகர் தலைமையதிபதி பதவியை வகித்த குறித்த தேசபந்து தென்னகோன், மேற்கூறிய ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட துர்நடத்தைச் செயல்களை மற்றும்/அல்லது பதவிக்குரிய தத்துவங்களை பாரதூரமான வகையில் துர்ப்பிரயோகம் செய்தமை, நாட்டின் பொலிசுப் பரிசோதகர் தலைமையதிபதி பதவி மற்றும் பொலிஸ் திணைக்களத்திற்கு அபகீர்த்தியை ஏற்படுத்தியமை மற்றும் பொலிசுப் பரிசோதகர் தலைமையதிபதி பதவிக்கு பொருத்தமற்ற செயல்களைச் செய்தமை ஆகியவற்றின் மூலம், 2002 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க அலுவலர்களை அகற்றுதல் (நடவடிக்கைமுறை) சட்டத்தின் 3 (ஈ) ஆம் பிரிவின் பிரகாரம் துர்நடத்தைக்குரிய செயல்களைப் புரிந்துள்ளாரென்பதாதலாலும்; மற்றும்

23. வேறுபட்ட தன்மையிலான விரிவான தத்துவங்களுடைய நாட்டின் பொலிசுப் பரிசோதகர் தலைமையதிபதி பதவியை வகித்த குறித்த தேசபந்து தென்னகோன், மேற்கூறிய ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட துர்நடத்தைச் செயல்களை செய்ததன் மூலம் மற்றும்/ அல்லது பதவியின் தத்துவங்களை பாரதூரமான வகையில் துர்ப்பிரயோகம் செய்ததன் மூலமும், 2002 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க அலுவலர்களை அகற்றுதல் (நடவடிக்கைமுறை) சட்டத்தின் 3(ஈ) பிரிவின் பிரகாரம், துர்நடத்தைக்குரிய செயலாக கருதப்படும் நாட்டின் பொலிசுப் பரிசோதகர் தலைமையதிபதியாக பதவிவகிக்கும் ஆளொருவரிடமிருந்து எதிர்பார்க்கும் உயர் தரத்திலான நடத்தையைக் கொண்டிருக்காமையால் பொலிசுப் பரிசோதகர் தலைமையதிபதி பதவிக்கு பொருத்தமற்றவராக மாறியுள்ளாரென்பதாதலாலும்.

அரசியலமைப்பினால் பாராளுமன்ற உறுப்பினர்கள் மீது பாராதீனப்படுத்தப்பட்டுள்ள கடப்பாடுகளை நிறைவேற்றுவதற்காகவும், நீதிக்கான ஒட்டுமொத்த நிர்வாக முறைமையின் சுயாதீனத்தையும் ஒருமைப்பாட்டையும் பாதுகாப்பதற்காகவும்; நியாயமான மற்றும் சுதந்திரமான சமூகத்தை உருவாக்கும் மற்றும் பாதுகாக்கும் பணி சாட்டப்பட்டுள்ளதொரு முதனிலைச் சட்ட அமுலாக்க நிறுவனம் என்ற வகையில் பொலிசுப் பரிசோதகர் தலைமையதிபதி பதவி மற்றும் பொலிஸ் திணைக்களம் மீது இந்த நாட்டின் பொதுமக்கள் வைத்துள்ள நம்பிக்கையைப் பாதுகாப்பதற்காகவும், மேற்கூறிய துர்நடத்தைச் செயல்கள் மற்றும்/அல்லது தத்துவங்களை பாரதூரமான வகையில் துர்ப்பிரயோகம் செய்தமை தொடர்பில் விசாரணை செய்து அதன் வெளிப்படுத்தல்களை அறிக்கையிடுவதற்காக 2002 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க அலுவலர்களை அகற்றுதல் (நடவடிக்கைமுறை) சட்டத்தின் 5 ஆம் பிரிவின் பிரகாரம் விசாரணைக் குழுவொன்று நியமிக்கப்படல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்குமாக.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு சார்பாக 151: எதிராக 0; பேரும் வாக்களித்து ஏற்றுக்கொள்ளப்பட்டது.

பாராளுமன்ற நிலையியற் கட்டளை 47(2)(ஆ) இன் பிரகாரம் இலத்திரனியல் வாக்கெடுப்பு முறையினைப் பயன்படுத்தி நூற்றி நாற்பத்தெட்டு (148) பாராளுமன்ற உறுப்பினர்கள் பின்வருமாறு வாக்களிப்பினை மேற்கொண்டுள்ளனர்:-

| | |
|---|---|
| G 001. K.V. Samantha Viddyarathna | Yes |
| G 002. Sunil Handunnetti | Yes |
| G 003. K.D. Lal Kantha | Yes |
| G 004. Vijitha Herath | Yes |
| G 005. Nalinda Jayathissa | Yes |
| G 006. Bimal Rathnayake | Yes |
| G 007. Harini Amarasuriya | Yes |
| G 010. Wasantha Samarasinghe | Yes |
| G 011. A.H.M.H. Abayarathna | Yes |
| G 012. Chrishantha Abeysena | Yes |
| G 013. Anil Jayantha | Yes |
| G 014. Harshana Nanayakkara | Yes |
| G 016. Saroja Savithri Paulraj | Yes |
| G 017. Ananda Wijepala | Yes |
| G 018. Hiniduma Sunil Senevi | Yes |
| G 019. Sunil Kumara Gamage | Yes |
| G 020. Kumara Jayakody | Yes |
| G 022. Anura Karunathilaka | Yes |
| G 023. Upali Pannilage | Yes |
| G 024. Nihal Galappaththi | Yes |
| G 025. Nihal Abeysinghe | Yes |
| G 026. Namal Karunaratne | Yes |
| G 027. Wasantha Piyathissa | Yes |
| G 028. Gamagedara Dissanayake | Yes |
| G 029. R.M. Jayawardhana | Yes |
| G 031. Rathna Gamage | Yes |
| G 032. Mahinda Jayasinghe | Yes |
| G 033. Chathuranga Abeysinghe | Yes |
| G 034. Eranga Gunasekara | Yes |
| G 037. Nalin Hewage | Yes |
| G 038. Prasanna Gunasena | Yes |

| | |
|---|---|
| G 039. Anton Jayakody | Yes |
| G 040. Sundaralingam Pradeep | Yes |
| G 041. Hemali Weerasekara | Yes |
| G 042. Ruwan Ranasinghe | Yes |
| G 043. Muneer Mulaffer | Yes |
| G 044. Susil Ranasinghe | Yes |
| G 046. Eranga Weeraratne | Yes |
| G 047. Namal Sudarshana | Yes |
| G 048. P. Ruwan Senarath | Yes |
| G 049. Madhura Senevirathna | Yes |
| G 050. Arun Hemachandra | Yes |
| G 051. Janitha Ruwan Kodithuwakku | Yes |
| G 052. Aruna Jayasekera | Yes |
| G 053. Sugath Thilakaratne | Yes |
| G 054. Harshana Suriyapperuma | Yes |
| G 055. Ashoka Ranwala | Yes |
| G 057. R.M. Gamini Rathnayake | Yes |
| G 058. Manjula Suraweera Arachchi | Yes |
| G 060. Shantha Pathma Kumara Subasingha | Yes |
| G 061. Samanmali Gunasingha | Yes |
| G 062. Gayan Janaka | Yes |
| G 063. Ajith Agalakada | Yes |
| G 064. Sagarika Athauda | Yes |
| G 065. Roshan Akmeemana | Yes |
| G 066. U. P. Abeywickrama | Yes |
| G 067. L.M. Abeywickrama | Yes |
| G 068. M.K.M. Aslam | Yes |
| G 069. Kaushalya Ariyarathne | Yes |
| G 070. Asitha Niroshana Egoda Vithana | Yes |
| G 071. Arkam Ilyas | Yes |
| G 072. Oshani Umanga | Yes |

| | |
|---|---|
| G 073. Krishnan Kalaichelvi | Yes |
| G 075. Wasantha Pushpa Kumara | Yes |
| G 076. Chaminda Lalith Kumara | Yes |
| G 077. Sarath Kumara | Yes |
| G 078. Nilanthi Kottahachchi | Yes |
| G 079. M.A.C.S. Chathuri Gangani | Yes |
| G 081. Thilanka U. Gamage | Yes |
| G 082. Nilusha Lakmali Gamage | Yes |
| G 083. Ajantha Gammeddage | Yes |
| G 084. Ajith Gihan | Yes |
| G 085. Jagath Gunawardana | Yes |
| G 086. Ashoka Gunasena | Yes |
| G 087. Ruwanthilaka Jayakody | Yes |
| G 089. Thushari Jayasingha | Yes |
| G 090. T.K. Jayasundara | Yes |
| G 091. Mayilvaganam Jegatheeswaran | Yes |
| G 092. Rajeevan Jeyachandramoorthy | Yes |
| G 093. Sellaththamby Thilaganathan | Yes |
| G 096. Thanura Dissanayake | Yes |
| G 097. Sugath Wasantha de Silva | Yes |
| G 098. Dharmapriya Dissanayake | Yes |
| G 099. Sujeewa Dissanayake | Yes |
| G 101. Susantha Kumara Nawarathna | Yes |
| G 102. Sena Nanayakkara | Yes |
| G 103. Nandana Pathmakumara | Yes |
| G 104. Aruna Panagoda | Yes |
| G 105. Nimal Palihena | Yes |
| G 106. Nishantha Perera | Yes |
| G 107. Stepni Fernando | Yes |
| G 108. Kanthasamy Prabu | Yes |
| G 109. Lal Premanath | Yes |

| | |
|---|---|
| G 111. Padmasiri Bandara | Yes |
| G 112. Ravindra Bandara | Yes |
| G 113. Sudath Balagalla | Yes |
| G 114. Sri Bavanandarajah | Yes |
| G 115. E. M. Basnayaka | Yes |
| G 116. Wijesiri Basnayake | Yes |
| O 016. Ramanathan Archchuna | Yes |
| O 023. Ajith P. Perera | Yes |
| O 039. Kaveenthiran Kodeeswaran | Yes |
| O 040. Gnanamuththu Srineshan | Yes |
| O 042. Mujibur Rahman | Yes |
| O 057. M.S. Uthumalebbe | Yes |
| O 064. Nissam Kariyappar | Yes |
| O 065. Sunil Biyanwila | Yes |
| O 066. S. Sandaruwan Madarasinghe | Yes |
| O 067. Prageeth Madhuranga | Yes |
| O 068. Jagath Manuwarna | Yes |
| O 069. Ruwan Mapalagama | Yes |
| O 070. Nandana Millagala | Yes |
| O 071. Riyas Farook | Yes |
| O 072. Danushka Ranganath | Yes |
| O 079. Elayathamby Srinath | Yes |
| O 080. Pathmanathan Sathiyalingam | Yes |
| O 081. Sanjeewa Ranasingha | Yes |
| O 082. Sunil Rathnasiri | Yes |
| O 083. Manjula Sugath Rathnayaka | Yes |
| O 084. A.M.M.M. Rathwaththe | Yes |
| O 085. Manoj Rajapaksha | Yes |
| O 087. Hasara Liyanage | Yes |
| O 088. Deepthi Wasalage | Yes |
| O 089. Kanchana Welipitiya | Yes |

| | |
|---|---|
| O 090. R. G. Wijerathna | Yes |
| O 091. Nishantha Samaraweera | Yes |
| O 092. Priyantha Wijerathna | Yes |
| O 093. Ruwan Wijeweera | Yes |
| O 094. Darmapriya Wijesinghe | Yes |
| O 095. Hiruni Wijesinghe | Yes |
| O 096. Athula Welandagoda | Yes |
| O 097. Fasmin Sharif | Yes |
| O 098. Dinindu Saman | Yes |
| O 100. Ambika Samivel | Yes |
| O 102. Chandana Sooriyaarachchi | Yes |
| O 103. Sooriyabandara | Yes |
| O 104. Aravinda Senarath | Yes |
| O 105. Kitnan Selvaraj | Yes |
| O 106. Janaka Senarathna | Yes |
| O 107. Chandima Hettiaratchi | Yes |
| O 108. Champika Hettiarachchi | Yes |
| O 109. Dinesh Hemantha | Yes |
| O 110. Geetha Herath | Yes |
| O 111. Bhagya Sri Herath | Yes |
| O 112. Muhammad Faizal | Yes |
| O 113. Aboobucker Athambawa | Yes |
| O 114. Najith Indika | Yes |
| O 115. Lakmali Hemachandra | Yes |

பாராளுமன்ற நிலையியற் கட்டளை 47 (2) (இ) இன் பிரகாரம் செயலாளர் நாயகம் பெயரை அழைப்பதன் மூலம் பின்வரும் பாராளுமன்ற உறுப்பினர்கள் மூன்று பேர் (03) வாக்களிப்பினை மேற்கொண்டார்:—

| | |
|---|---|
| Sunil Rajapaksha | Yes |
| T. B. Sarath | Yes |
| Thilina Samarakoon | Yes |

**11. ஒத்திவைப்பு:** அவ்வேளை நேரம் பி.ப. 5.30 மணிக்கு மேலாகிவிடவே, பி.ப. 5.57 மணிக்கு பிரதிச் சபாநாயகர் இன்றைய தின சபைத் தீர்மானத்தின்படி பாராளுமன்றத்தை ஒத்திவைத்தார்.

அதன்படி பாராளுமன்றம் இன்றைய சபைத் தீர்மானத்திற்கமைய 2025 ஏப்ரல் 09 ஆம் திகதி புதன்க்கிழமை மு.ப. 9.30 மணி வரை ஒத்திவைக்கப்பட்டது.